முனைப்பாடியார்

இயற்றிய

# அறநெறிச்சாரம்


தி. செல்வக்கேசவராய முதலியார், M.A.,

*Pachaiyappa's College*



MADRAS

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY

1912

விலை, 4 அணா.

# NOTE

This reprint of the first edition of 1905 has had the advantage of being compared with a manuscript copy placed at my disposal by my friend Mr. A. Sudarsanam Naynar, Sub-Inspector of Police, Pernamallur, North Arcot, for which I am much obliged to him.

*15th Feb., 1912.* T. C.

# PREFACE

42

ARANERICHÁRAM is a Jain work of rare merit by one Munaippádiár. The date of the work cannot now be fixed with precision. Some of its stanzas are found in an old poetical anthology, named Purathirattu (also called Prasangábharanam), whose contents range between the age of the Last Academy of Madura and that of Kamban. We may, therefore, only state approximately that it is more than five hundred years old.

Nearly one-third of its contents savours of Jainism, and this is perhaps one reason why the work has been neglected and is not as popular as it deserves to be. The rest can be studied with advantage by any orthodox Tamilian without prejudice to his faith. The earnestness of the author, his easy flow of style, and his pointed metaphors commend themselves to any casual reader. Except that some stanzas are found quoted in Ellis's Kural, and that some stanzas find a place in Pope's Anthology (Seyyul Kalambakam)—and these books are now out of print—no other use seems to have been made of this work.

A few months back Dewan Bahadur V. Krishnama Chariar suggested to me the desirability of publishing the work. I had a manuscript copy of the work transcribed from an old cadjan copy of the late T. Shanmuka Kaviroyar, Tamil Pandit, San Thomè College. This I compared with the two copies available in the Government Manuscript Library. I could not rely upon the readings found in these copies. I could not get any from Sri Pandi Duraisami Devar, the president-founder of the Tamil Sangam in Madura,—he borrowed my own copy for transcription some years ago. I applied to some Jain scholars in Conjeevaram to spare me a copy for a few

days. They refused to comply with the request. I then requested M. R. Ry. A. Singaravelu Mudaliar Avargal, Senior Tamil Pandit, Govindu Naicker's Middle School, Madras, to lend me his copy. I am much obliged to him, as his copy, from a Jain, was of incalculable service in determining the correct reading of many stanzas which were actually tantalising me. Nevertheless, the present publication cannot be said to be accurate, as there are about half a dozen stanzas, and even more, still puzzling and defying my attempts to decipher them.

The work, in a chaotic condition as it was, afforded no clue to classification and arrangement. A casual perusal of Arungalacheppu, another Jain work, gave the clue, however, and I was able to find a stanza in Araneri-chấram, which cleared the difficulty. The work then lent itself readily to the classification now adopted. To facilitate reference to old manuscript copies, I have given the corresponding number of every stanza by its side, without numbering the stanzas in accordance with the present arrangement.

I am prepared to forfeit the copyright (what right have we for works of yore whose authors never had the benefit of any Copyright Act?) and destroy the very few copies now printed, should any other gentleman in possession of better manuscript copies be willing to issue a better edition of the work. It is with this intention (I speak in earnest) that I bring out this edition. Except for the labour (which of course was one of love) and time spent in editing this work for the first time, I admit I shall be making no serious sacrifice in thus forfeiting the so-called right. Alas! we can never redeem the shame of letting slip irrevocably so many of our old literary gems into the cursed stream of Lethe.

T. C.

# முகவுரை.

திவான்பஹதர். வ. கிருஷ்ணமாசாரியர் இவ்வறநெறிச் சாரத்தை அச்சிடுகவென என்னை வேண்டினர். திருமயிலை சண்முகக்கவிராய ரவர்களிடம் இருந்த பழைய ஏட்டுப்பிரதி யைப் பார்த்து ஏழு வருடங்கட்கு முன்னர் எழுதுவித்த என் பிரதி அச்சிடுதற்காகாத நிலைமையில் இருந்ததனால், சென்னை துரைத்தனக் கையெழுத்துப் பிரதிசாலையிலுள்ள இரண்டு பிரதிகளுடன் அதனை ஒத்திட்டு ஒருவாறு திருத்திக்கொண் டேன். கொண்டும், பல பாக்கள் ஐயநிகழ்ச்சிக்கே இடமாக இருந்தமையால், ஊக்கம் இடையீடு படுகையில், சென்னை கோவிந்து நாயகர் பாடசாலையில் தமிழாசிரியர் ஸ்ரீ ஆ. சிங்கார வேலு முதலியாரவர்கள் தம்மிடத்திருந்த ஒரு சைனருடைய பிரதியை உதவினர். இடையீடுபெட்ட ஊக்கத்தை இவ்வுதவி மீண்டும் எழச்செய்தது. இது காலத்தாற்செய்த வுதவியாத லின், முதலியாரவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவ னாகிறேன். இந்தப் பிரதி பல வழுக்களையும் ஐயங்களையுங் களைவதற்கு ஆதாரமாக இருந்தது. இருந்தும், சில பாக்கள் பொருள் இதுவோ அதுவோ எதுவோ எனத் துணியலாகா மல் இருந்தன. அப்பாக்களையும் அறியாமையால் விடுபட்ட வழுக்களையும் பிரதியுடையவர்கள் கண்டுபிடித்து வெளியிடு தல்வேண்டும். அவர்கள்பால் நான் இறுக்கும் தண்டம் இதுவே. அன்னோர் அது செய்து வேறொரு பதிப்பு அச்சிடுவதாயின், என்னிடத்தில் எஞ்சியிருக்கும் அச்சுப்பிரதிகளை அழித்துவிட வும் ஆயத்தமாக இருக்கிறேன். என்பால் அவர்கள் இறுக்கும் தண்டம் இதுவே.

இந்நூலினை நாலடியார்போல் பாகுபாடு செய்து அச் சிட எண்ணியிருந்தேன். சில பாக்கள் என் பாகுபாட்டில் அடங்கவில்லை. இங்ஙனமிருக்கையில், வேறு காரியமாக அருங் கலச்செப்பு என்னும் சைனநூலைப் பார்வையிடுகையில், அந் நூலின் பாகுபாடு அறநெறிச்சாரத்துக் கடுத்ததென்று கண்

டேன். அந்த நோக்கத்துடன் மீண்டும் இந்நூலைப் பரிசோதிக்கையில், "காட்சியொழுக்கொடு ஞானந் தலைநின்று" என்னும் பத்தாவது பாவே இந்நூலின் உட்கோளாமெனக் கொண்டு, அதன்படியே பாகுபாடு செய்துவிட்டேன். இங்ஙனம் பாகுபாடு செய்கையில், பாக்கள் முன்னது பின்னும் பின்னது முன்னுமாக இடம் பெயர்தலால், ஏட்டுப்பிரதியின்படி அவ்வப்பாவிற்குரிய எண்ணை அதனதன் பக்கல் காட்டியிருக்கிறேன். பிரதியுள்ளவர்கள் இந்த ஆதாரவைக்கொண்டு எளிதில் ஒத்திட்டுக்கொள்ளலாம். வேறு பிரதிகளும் உரையும் (உரை சில சைனர்களிடம் இருப்பதாகக் கேள்வி) கிடைக்கிற வரையில் இந்தப் பாகுபாட்டினை முடிந்ததொன்றாகக் கொள்ளல் சாலாது.

ப்ரஸங்காபரணம் என்னும் புறத்திரட்டில் இந்நூற்பாக்கள் சில உண்டு. புறத்திரட்டில் சங்கச் செய்யுள்கள் முதலாகக் கம்பராமாயணம் நளவெண்பா முதலிய பிற்காலத் திலக்கியங்கள் வரையில் பல நூல்களினின்றும் எடுத்த பாக்களைச் சேர்த்திருத்தலால், அறநெறிச்சாரம் ஐந்நூறு வருடங்களுக்கு முற்பட்ட பழைய நூல் என்பது துணியலாம். நூலின் இறுதியிலுள்ள நாந்தியால் நூலாசிரியர் முனைப்பாடியார் என்பது தெளிவு.

முதலில் தெய்வவணக்கம் ஒன்றும், இறுதியில் நூற்பயன் இரண்டும் நாந்தி ஒன்றும் நீங்க, இந்நூலில் 222 வெண்பாக்கள் உள்ளன. அருகக்கடவுளும் அருகஸமயமும் அருகவாகமமும் சிறப்பாகக் கொண்டுரைக்கும் வெண்பாக்கள் நீங்க, அறமும் ஒழுக்கமும் முதலியன கூறும் ஏனைப்பாக்கள் செம்பாகமாய்ச் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுவாய்ந்து ஸமயக்ஷாத்ரமின்றி எல்லோரும் மேற்கொள்ளத்தக்கனவாக இராநின்றன. பல பாடல்களில் உருவகமுகத்தான் விளக்கியிருக்கும் கருத்துக்கள் பசுமரத்தில் அறைந்த ஆணிபோல மனத்தில் வேரூன்றி நிலைக்கும் செவ்விவாய்ந்துள்ளன.

பிரம்பூர்,
1905-ஆு ஜனவரிமீ 27உ. } தி. செ.

# அறநெறிச்சாரம்.

### தற்சிறப்புப்பாயிரம்.

*தாவின்றி யெப்பொருளுங் கண்டுணர்ந்து தாமரைப்*
*பூவின்மேற் சென்றான் புகழடியை—நாவிற்*
*றுதித்தீண் டறநெறிச் சாரத்தைத் தோன்ற*
*விரிப்பன் சுருக்காய் விரைந்து.*

## பாயிரம்.

### அறவுரை கேட்டல்.

*மறவுரையுங் காமத் துரையு மயங்கிப்*
*பிறவுரையு மல்கிய ஞாலத்—தறவுரை*
*கேட்குந் திருவுடை யாரே பிறவியை*
*நீக்குந் திருவுடை யார்.* (1)

உரைப்பவன் கேட்பான் உரைக்கப் படுவ
துரைத்ததனா லாய பயனும்—புரைப்பின்றி
நான்மையும் போலியை நீக்கி யவைநாட்டல்
வான்மையின் மிக்கார் வழக்கு. [வான்மை—வாய்மை.] (2)

### உரைப்பவன்.

*அறங்கேட் டருள்புரிந் தைம்புலன்கண் மாட்டும்*
*இறங்கா திருசார் பொருளுந்—துறந்தடங்கி*
*மன்னுயிர்க் குய்ந்துபோம் வாயி லுரைப்பானேல்*
*பன்னுதற்குப் பாற்பட் டவன்.* (3)

பிள்ளைபேய் பித்தன் பிணியாளன் பின்னோக்கி
வெள்ளை களிவிடமன் வேட்கையான்—தெள்ளிப்
புரைக்கப் பொருளுணர்வா ரென்றிவரே நூலை
உரைத்தற் குரிமையிலா தார். (4)

[இச்செய்யுள் ஜீவஸம்போதனை என்னும் ஜைநநூலில் அநித்திய மென்னு முதலதிகாரத்தில் (29—வது செய்யுள்) இவ்விதமாகவே அமைந்திருக்கின்றது. இதன் பொருள் பின் வருமாறு எழுதி யிருக்கின்றது. "பாலனும் பேய்கொண்டானும் பித்தனும் வியாதியாளனும் தனமோகியும் அடக்கமிலாதானும் களிப்பா னும் கடுவிஷமனும் வேட்கையானும் தோஷக்கிராகியும் என் றிச் சொல்லப்பட்டா ரியாவரும் தர்மமுரைத்தற் குரியரல்லர். உபசமரும் க்ஷமாபரரும் சமத்துவிபாவமுடையாரும் தர்ம முரைத்தற் குரியர் என்றவாறு."]

## கேட்பான்.

தன்சொல்லே மேற்படுப்பான் தண்டி தடிபிணக்கன்
புன்சொல்லே போதரவு பார்த்திருப்பான்—இன்சொல்லை
என்றிருந்துங் கேளாத வேழை யெனவிவர்கட்
கான்றவர்கள் கூறா றறம். [தண்டி—மாணி.] (5)

தடுமாற்றுக் கஞ்சுவான் தன்னை யுவர்ப்பான்
வடுமாற்ற மஞ்சித்தற் காப்பான்—படுமாற்றால்
ஒப்புரவு செய்தாண் டுறுதிச்சொற் சேர்பவன்
தக்கான் றரும வுரைக்கு. (6)

['தடுமாற்ற மஞ்சுவான்' என்றும் பாடம்.]

ஆவட்டை போன்றறியா தாரை மயக்குறுத்திப்
பாவிட்டார்க் கெல்லாம் படுகுழியாய்க்—காவிட்
டிருமைக்கு மேமம் பயவா வெனவே
தருமத்துப் போலிக டாம். (7)

['பாவிட்டற்கெல்லாம்' என்றும் பாடம்.]

### உரைக்கப்படுவது.

வினையுயிர் கட்டுவீ டின்ன விளக்கித்
தினையனைத்துந் தீமையின் றாகி—நினையுங்கால்
புல்லறத்தைத் தேய்த்துலகி னோடும் பொருந்துவதாம்
நல்லறத்தை நாட்டு மிடத்து. (8)

### உரைத்ததனாலாய பயன்.

புல்ல வுரைத்தல் புகழ்தல் பொருளீதல்
நல்ல ரிவரென்று நட்பாடல்—சொல்லின்
அறங்கேள்வி யாலாம் பயனென் றுரைப்பர்
மறங்கேள்வி மாற்றி யவர். (9)

## நூலின் உட்கோள்.

காட்சி யொழுக்கொடு ஞானந் தலைநின்று
மாட்சி மனைவாழ்த லன்றியு—மீட்சியில்
வீட்டுலக மெய்தல் எனவிரண்டே நல்லறங்
கேட்டதனு லாய பயன். (10)

["நற்காட்சி நன்ஞான நல்லொழுக்க மிம்மூன்றுந், தொக்க வறச் சொற் பொருள்" என்பது அருங்கலச்செப்பு. திருநூற்றந்தாதி 24—வது செய்யுளில் "மன்னுயிர்க்குப் பரத்திரயங்கள் பணித்த பிரான்" என்புழி, பரத்திரயம் மேலான ரத்நத்ரயம்: அவை ஸம்யக்தர்சனம் ஸம்யக்ஜ்ஞானம் ஸம்யக்சாரித்ரம் என்பன என வுரைத்திருக்கின்றது.]

# அறம்

## அறத்தினியல்பு.

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை—நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்து மான்ற குணம். (176)

[செம்மையொன்றின்மை—பக்ஷபாதமின்மை.]

## அறத்தின் விசேஷம்.

தனக்குத் துணையாகித் தன்னை விளக்கி
இனத்து ளிறைமையுஞ் செய்து—மனக்கினிய
போகந் தருதலாற் பொன்னே அறத்துணையோ
டேகமா நண்பொன்று மில். (159)

ஈட்டிய வொண்பொருளு மில்லொழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்—மூட்டு
மெரியி னுடம்பொழியும் ஈர்ங்குன்ற நாட
தெரியி னறமே துணை. (147) [காட்டுவாய்—இடுகாட்டில்.]

நோற்பவ ரில்லவர்க்குச் சார்வாகி இல்லவரும்
நோற்பவர்க்குச் சார்வா யறம்பெருகி—யாப்புடைக்
காழுங் கிடுகும்போ னிற்குங் கயக்கின்றி
ஆழிசூழ் வையத் தறம். (84)

## இளமையி லறஞ்செய்தல்.

இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாகி
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். (112)

[“அறப்பைங்கூ ழாக்குவார்க், சென்று மிடும்பை யில” என்பது
புறத்திரட்டில் கண்ட பாடபேதம்.]

காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலை
கிடந்தா னெழுத லரிதான்மற் றென்கொல்
அறங்காலைச் செய்யாத வாறு. (67)

சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரி—தென்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம். (69)

கோட்டுநா ளிட்டுக் குறையுணர்ந்து வாராதால்
மீட்டொரு நாளிடையுந் தாராதால்—வீட்டுதற்கே
வஞ்சஞ்செய் கூற்றம் வருதலால் நன்றாற்றி
அஞ்சா தமைந்திருக்கற் பாற்று. (109)

இன்றுளா ரின்றேயு மாய்வர் அவருடைமை
அன்றே பிறருடைமை யாயிருக்கும்—நின்ற
கருமத்த ரல்லாத கூற்றின்கீழ் வாழ்வார்
தருமந் தலைநிற்றல் நன்று. (111)

மின்னு மிளமை யுளதா மெனமகிழ்ந்து
பின்னை யறிவென்றல் பேதைமை—தன்னைத்
துணித்தானுந் தூங்கா தறஞ்செய்க கூற்றம்
அணித்தாய் வருதலு முண்டு. (106)
[மின்னும்—ப்ரகாசிக்கும். துணித்தானும்—வருத்தியும்.]

மூப்பொடு தீப்பிணி முன்னுறீஇப் பின்வந்து
கூற்ற வரசன் குறும்பெறியு—மாற்ற
அறவரண மாராய்ந் தடையினஃ தல்லாற்
பிறவரண மில்லை யுயிர்க்கு. (105)

திருத்தப் படுவ தறக்கருமந் தம்மை
வருத்தியு மாண்புடையார் செய்க—பெருக்க
வரவும் பெருங்கூற்றம் வன்கண் ணுமன்கீழ்த்
தரவறுத்து மீளாமை கண்டு. (107)

முன்னே யொருவன் முடித்தான்றன் றுப்பெலாம்
என்னே யொருவ னிகழ்ந்திருத்தல்—முன்னே
முடித்த படியறிந்து முன்முன் னறத்தைப்
பிடிக்க பெரிதாய் விரைந்து. (114)

குறைக்கருமம் விட்டுரைப்பிற் கொள்ள வலவா
அறக்கரும மாராய்ந்து செய்க—பிறப்பிடைக்கோர்
நெஞ்சேமாப் பில்லாதான் வாழ்க்கை நிரயத்துத்
துஞ்சாத் துயரந் தரும். (65)

அறம்புரிந் தாற்றுவ செய்யாது நாளும்
உறங்குதல் காரண மென்னை—மறந்தொருவன்
நாட்டு விடக்கூர்தி யச்சிறுங் காலத்துக்
கூட்டுந் திறமின்மை யால். (167)

பாவம் பெருகப் பழிபெருகத் தன்னேம்பி
ஆவ தொன்றில்லை யறனழித்துப்—பாவம்
பொருஅ முறைசெய் பொருவில் ஞமன்கீழ்
அருவுண்ணு மாற்றவு நின்று. (108)

முற்செய் வினையின் பயன்றுய்த் ததுவுலந்தால்
பிற்செய் வினையின்பின் போகலால்—நற்செய்கை
ஆற்றுந் துணையு மறமறவேல் நன்னெஞ்சே
கூற்றங் குடில்பிரியா முன். (185)

திரையவித்து நீராட லாகா உரைப்பார்
உரையவித் தொன்றுஞ்சொ லில்லை—அரைசராய்ச்
செய்து மறமெனினு மாகா துளவரையால்
செய்தவற்கே யாகுந் திரு. (66)

## அறிவிலிகள் அறவுரையால் பயனெய்தாமை.

கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றென்று மறனுணர்தல்—நல்லாய்
நறுநெய் நிறைய முகப்பினு மூழை
பெறுமோ சுவையுணரு மாறு. (55)

வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகும்—அஃதேபோல்
வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு. (51)

கயத்திடை யுய்த்திடினுங் கன்னனையா தென்றும்
பயற்றுக் கறிவேவா தற்றால்—இயற்றி
அறவுரை கேட்ட விடத்து மனையார்
திறவுரை தேறா தவர். (50)

## பொது.

அற்ற பொழுதே யறநினைத்தி யாதொன்றும்
பெற்ற பொழுதே பிறநினைத்தி—யெற்றே
நிலைமையி னன்னெஞ்சே நின்னொடு வாழ்க்கை
புலைமயங்கி யன்ன துடைத்து. (184)

ஒருபால் திருத்த வொருபால் கிழியும்
பெருவாழ்க்கை முத்தாடை கொண்ட—திருவாளா
வீணாள் படாமைநீ துன்னம்பெய் யேயாக
வாணாள் படுவ தறி. (116) [துன்னம்—தைத்தல்.]

[துன்னும் பெய்யேயால்—பாடபேதம்.]

உள்ளநா ணல்லறஞ் செய்கென்னுஞ் சாற்றன்றோ
டில்லைநாட் பேயென் றிடங்கடிந்து—தொல்லை
இடைக்கடையு மாற்றா ரிறந்தார்க்கு நின்றார்
கடைத்தலைவைத் தீயும் பலி. (70)

[சாத்தன்றோ—பாடபேதம்.]

ஒருநாளு நீதரியா யுண்ணென்று சொல்லி
இருநாளைக் கீந்தாலும் ஏலாய்—திருவாளா
உன்னோ டுறுதி பெரிதெனினும் இவ்வுடம்பே
நின்னோடு வாழ்தல் அரிது. (158)

கட்டளை கோடித் திரியிற் கருதிய
இட்டிகையுங் கோடு மதுபோலும்—ஒட்டிய
காட்சி திரியி னறந்திரியு மென்றுரைப்பர்
மாட்சியின் மிக்கவர் தாம். (56)

# I. நற்காட்சி.

["மெய்ப்பொரு டேறுதல் நற்காட்சி .யென்றுரைப்பர், எப்பொ ருளுங் கண்டுணர்ந் தார்" என்றார் அருங்கலச்செப்பில்.]

அவ்விநய மாறு மும்மூட மெண்மயமும்
செவ்விதி னீக்கிச் சினங்கடிந்து—கவ்விய
எட்டுறுப்பி னுய வியல்பினற் காட்சியார்
சுட்டறுப்பர் நாற்கதியிற் றுன்பு. (11)

## அவ்விநயமாறு.

[அவ்விநயம்—விநயமல்லாதது. "நல்வினையிற் றீர்ந்த வணக்கத்தை நல்லோர்கள், சொல்லுவ ரவ்விநய மென்று" — அருங்கலச் செப்பு.]

அச்சமே யாசை உலகித மன்புடைமை
மிக்கபா சண்டமே தீத்தெய்வ—மெச்சி
வணங்குதல் அவ்விநயம் என்பவே மாண்ட
குணங்களிற் குன்று தவர். (12)

[உலகிதம்—லௌகிகம். தீத்தெய்வம்—மித்தியா தேவதை.]

மன்ன னுடன்வயிறு மாண்புடைத் தாய்தந்தை
முன்னி முடிக்கு முனியாசான்—பன்னியங்
காய குரவ ரிவரென்ப வையத்துத்
தூய குலஞ்சாதி யார்க்கு. (13)

## மும்மூடம்.

[மும்மூடம்—உலகமூடம், பாசண்டிமூடம், தேவமூடம். மூடம்—மயக்கு.]

### (1) உலகமூடம்.

["வரைபாய்த றீப்புகுத லாறூட லென்ன, உரைப்பி னுலக மயக்கு"—அருங்கலச்செப்பு.]

மாமாங்க மாடல் மணற்குவித்தல் கல்லிடுதல்
தாமோங் குயர்வரைமேற் சாவீழ்தல்—காமங்கொண்
டாடோ டெருமை யறுத்தல் இவையுலக
மூடம் எனவுணரற் பாற்று. (14)

கண்டதனைத் தேறா தவனும் கனாக்கண்டு
பெண்டிரைப் பேதுற்றுக் கொன்றானும்—பண்டிதனாய்
வாழ்விப்பக் கொண்டானும் போல்வரே வையத்துக்
கோள்விற்பக் கொள்ளாநின் றார். (15)

### (2) பாசண்டிமூடம்.

["மாசுண்ட மார்க்கத்து நின்றாரைப் பூசித்தல், பாசண்டி மூடமெனல்"—அருங்கலச்செப்பு.]

தோல்காவி சீரை துணிகீழ் விழவுடுத்தல்
கோல்கா கரகங் குடைசெருப்பு—வேலொடு
பல்லென்பு தாங்குதல் பாசண்டி மூடமாய்
நல்லவரா னாட்டப் படும். (16)

ஆவரண மின்றி அடுவாளு மானைதேர்
மாவரண மின்றி மலைவானும்—தாவில்
கழுதை யிலண்டஞ் சுமந்தானும் போலப்
பழுதாகும் பாசண்டி யார்க்கு. (17)

## (3) தேவமூடம்.

[“வாழ்விப்ப தேவ ரெனமயங்கி வாழ்த்துதல், பாழ்பட்ட தேவ மயக்கு” “மயக்கார்வஞ் செற்ற முடையாரை யேத்தல், துயக் குடைத் தேவ மயக்கு”—அருங்கலச்செப்பு.]

சக்கர ணான்முகன் சங்கரன் பூரணன்
புத்தன் கபிலன் கணாதரனென்—றெத்திறத்
தேகாந்த வாதிக ளெண்கேட்ட வாதன்போல்
ஆகாதா மாத்தன் றுணிவு. (18)

[ஆதன்—பேதை. ஆத்தன்—அருகன்.]

## எண்மயம்.

[எண்மதம்—எண்வகைச் செருக்கு. “பிறப்புக் குலம்வலி செல்வம் வனப்புச், சிறப்புத் தவமுணர்வோ டெட்டு” “இவற்றாற் பெரியோ மியாமென் றெழுந்தே, இகக்கி லிறக்கு மறம்”—அருங்கலச்செப்பு. பிறப்பு—தாய் வமிசம். குலம்—தகப்பன் வமிசம். வலி—பராக்கிரமம். செல்வம்—ஐசுவரியம். வனப்பு—அழகு. சிறப்பு—பூச்சியம்.]

அறிவுடைமை மீக்கூற்ற மாந குலனே
உறுவலி நற்றவ மோங்கிய—செல்வம்
பொறிவனப்பி னெம்போல்வா ரில்லென்னு மெட்டும்
இறுதிக்க ணேமாப் பில. (19)

## எட்டுறுப்பு.

[“எட்டு வகையுறுப்பிற் றாகி யியன்றது, சுட்டிய நற்காட்சி தான்”—அருங்கலச்செப்பு.]

ஐய மவாவே யுவர்ப்பு மயக்கின்மை
செய்பழி நீக்க னிறுத்துதல்—மெய்யாக
அன்புடைமை யான்ற வறவிளக்கஞ் செய்தலோ
டென்றிவை யெட்டா முறுப்பு. (20)

[செய்யபழி நீக்கி நிறுத்துதல் என்றும் பாடம்.]

தலைமகனு நூலு முனியும் பொருளுந்
தொலைவின் றுணிவொடு பக்கம்—மலைவின்றி
நாட்டியிவ் வாறு முரைப்பரே நன்னெறியைக்
காட்டி யறமுரைப் பார். (29)

["தலைமகனு நூலு முனியுமிம் மூன்றும், நிலைமைய தாகும் பொருள்" என்றது அருங்கலச்செப்பு.]

## தலைமகன்.

["குற்றமொன் றின்றிக் குறைவின் றுணர்ந்தறம், பற்ற வுரைத்தா னிறை" "தெறித்த பறையி னிராகாதி யின்றி, உரைத்தா னிறைவ னறம்"—அருங்கலச்செப்பு.]

இறந்தும் பெரியநூ லெம்மதே தெய்வம்
அறந்தானு மிஃதேசென் றூற்றத்—துறந்தார்க
டம்பாலே வாங்கி யுரைத்ததனு லாராய்ந்து
நம்புக நல்ல வறம். (23)

ஒன்றேடொன் றொவ்வாத பாசண்டத் துள்ளெல்லாம்
ஒன்றேடொன் றொவ்வாப் பொருடெரிந்—தொன்றேடொன்
றொவ்வா வுயிரோம்பி யுட்டேய்மை பெற்றதே
அவ்வாய தாகு மறம். (24)

## நூல்.

["மெய்ப்பொருள் காட்டி உயிர்கட் கரணாகித், துக்கங் கெடுப்பது நூல்" "என்றுமுண் டாகி இறையால் வெளிப்பட்டு, நின்றது நூலென் றுணர்"—அருங்கலச்செப்பு.]

நிறுத்தறுத்துச் சுட்டுரைத்துப் பொன்கொள்வான் போல
அறத்திறனு மாராய்ந்துள் புக்காற்—பிறப்பறுக்கும்
மெய்ந்நூ றலைப்பட லாகுமற் றாகாதே
கண்ணேடிக் கண்டதே கண்டு. (21)

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். (22)

## மு னி.

["இந்திரியத்தை வென்றான் தொடர்ப்பாட்டோ டாரம்ப, முந்து துறந்தான் முனி" "தத்துவ ஞான நிகழ்ச்சியுஞ் சிந்தையு, முய்த்த விருடிகண் மாண்பு"—அருங்கலச்செப்பு.]

துறந்தார் துறந்தில ரென்றறிய லாகும்
துறந்தவர் கொண்டொழுகும் வேடந்—துறந்தவர்
கொள்ப கொடுப்பவற்றாற் காணலாம் மற்றவர்
உள்ளங் கிடந்த வகை. (25)

விந்தியக் கொல்கா விருமுத் தொழில்செய்தல்
சிந்தைநி ரப்பியத்தின் மேலாக்கல்—பந்தம்
வருவா விவையெய்து மாறொழுகு வாற்கே
உரிதாகு மும்ப ருலகு. (26)

[விந்து—இந்திரியம். அவ்வியம்—தேவர்க்கிடப்படுவது.]

அழலடையப் பட்டா னதற்குமா றாய
நிழலாதி தண்ணியல்பே நாடும்—அழலதுபோற்
காமாதி யாலாங் கடுவினை கட்டழித்துப்
போமாறு செய்வார் புரிந்து. (27)

['கடுவினைக் கட்டறுத்து'—பாடபேதம்.]

வெப்பத்தா லாய வியாதியை வெல்வதூஉம்
வெப்பமே யென்னார் விதியறிவார்—வெப்பந்
தணிப்பதூஉந் தட்பமே தான்செய் வினையைத்
துணிப்புதூஉந் தூய வொழுக்கு. (28)

### பொருள்.

தத்தம திட்டந் திருட்ட மெனவிவற்றே
டெத்திறத்து மாறுப் பொருளுரைப்பர்—பித்தரவர்
நூல்களும் பொய்யேயந் நூல்விதியி னேற்பவரும்
மால்க ளௌவுணராற் பாற்று. (30)

குருட்டுச் செவிடர்கள் கோல்விட்டுத் தம்முள்
தெருட்டி வழிசொல்லிச் சேறல்—திருட்டேட்டம்
மாறு கொளக்கிடந்த மார்க்கத்தால் நற்கதியில்
ஏறுது மென்பா ரியல்பு. (31)

[திருட்டேட்டம்—திருட்டம் இட்டம்.]

### தொலைவின்றுணிவு.

அற்றறியுங் காரணத்தை யாராய்ந் தறவுரையைக்
கற்றறிந்த மாந்த ருரைப்பவே—மற்றதனை
மாட்சி புரிந்த மதியுடை யாளரே
கேட்பர் கெழுமி யிருந்து. (32)

உருவு மொழுக்கமு நூலும் பொருளும்
பொருவிற் றலைமகனே டின்ன—வொருவாது
கண்டு கருதிக் கயக்கறத் தேர்ந்தபின்
கொண்டுவீ டேற்க வறம். (33) [சயக்கு—சோர்வு.]

['கயக்கறுத் தொத்தபின்' பாடபேதம்.]

நூலுணர்வு நுண்ணொழுக்கங் காட்டுவிக்கு நொய்யவாம்
சால்பின்மை காட்டுஞ் சவர்ச்செய்கை—பால்வகுத்துப்
பட்டிமையா லாகா பரமார்த்தம் பற்றின்மை
ஒட்டுவா னுய்ந்துபோ வான். (34) [சவர்—சவர்நிலம்.]

### பக்கம்.

புனைபடை கொண்டஞ்சித் தற்காப்பான் றன்னை
வினைகடியு மென்றடி வீழ்தல்—கனையிருட்கண்
பல்லெலி தின்னப் பறைந்திருந்த பூனையை
இல்லெலி காக்குமென் றற்று. (35) [பறைதல்—சொல்லல்.]

மாடமு மண்ணீடுங் கண்டடக்க மில்லாரைக்
கூடி வழிப்படுங் கோறமை—யாடரங்கின்
ஏவகமாய் நின்றானோர் கூத்தனை யூர்வேண்டிச்
சேவகமாய் நின்ற துடைத்து. (36)

[மண்ணீடு—மூடுசாந்திட்ட வீடு.]

நாற்றமொன் றில்லாத பூவொடு சாந்தினை
நாற்றந்தான் வேண்டி யதுபோலும்—மாற்ற
மறுவறு சீலமு நோன்புமில் லாரை
உறுபயன் வேண்டிக் கொளல். (37)

மால்கடல்சூழ் வையத்து மையாதாங் காத்தோம்பி
பால்கருதி யன்ன துடைத்தென்பர்—மேல்வகுத்து
மன்னிய நற்குண மில்லாரைத் தாம்போற்றிப்
புண்ணியங் கோடு மெனல். (38) [மையா—மலட்டுப்பசு.]

உடங்கமிழ்தங் கொண்டா னொருவன் பலரும்
விடங்கண்டு நன்றிதுவே யென்றால்—மடங்கொண்டு
பல்லவர் கண்டது நன்றென் றமிழ்தொழிய
நல்லவனு முண்ணுமோ நஞ்சு. (39) [உடங்கு—கூடிநிற்கை.]

அருள்வட்ட மாக வறிவு கதிராய்ப்
பொருள்வட்ட மெல்லாம் விளக்கி—யிருள்வட்டம்
மாற்று மறிவான ஞான வளரொளியான்
வேற்றுலிங்கந் தோன்றும் வெளிறு. (40)

தன்னையுந் தன்னிற் பொருளையும் பட்டாங்கிற்
பன்னி யறமுரைக்க வல்லாரை—மன்னிய
சிட்ட ரெனச்சிட்டன் றேற்றுவ தல்லாரைச்
சிட்டரென் றேத்தல் சிதைவு. (41)

எத்துணை கற்பினும் ஏகாந்த வாதிகள்
புத்தியுஞ் சொல்லும் பொலிவிலவாய்—மிக்க
அறிவனூல் கற்றா ரலவெனவே நிற்கும்
எறிகதிர்முன் னீள்சுடரே போன்று. (42)

[நற்காட்சியின் சிறப்பு அருங்கலச்செப்பில் பின்வருமாறு உரைத்திருக்கின்றது.]

காட்சி விசேடம் உணர்வு மொழுக்கமும்
மாட்சி யதனிற் பெறும்.

நற்காட்சி யில்லா ருணர்வு மொழுக்கமும்
ஒற்கா வொசிந்து கெடும்.

காட்சியொ டொப்ப தியாங்காணேம் வையத்து
மாட்சி யுடைய துயிர்க்கு.

விரத மிலரெனினுங் காட்சி யுடையார்
நரகம் புகுத விலர்.

கலங்கலில் காட்சி யுடையா ருலகில்
விலங்காய்ப் பிறத்த விலர்.

பெண்டிர் நபுஞ்சக ராகார் பிழைப்பின்றிக்
கொண்டநற் காட்சி யவர்.

இழிகுலத் தென்றும் பிறவா ரிறைவன்
பழுதறு காட்சி யவர்.

உறுப்பிற் பிறர்பழிப்ப வென்றும் பிறவார்
மறுப்பாடில் காட்சி யவர்.

குறுவாழ்க்கை நோயொடு நல்குரவு கூடப்
பெறுவாழ்க்கை யுட்பிறத்த வில்.

அரச ரிளவரசர் செட்டியரு மாவர்
புரைதீர்ந்த காட்சி யவர்.

விச்சா தரரும் பலதே வருமாவர்
பொச்சாப்பில் காட்சி யவர்.

முச்சக் கரத்தொடு சித்தியு மெய்துவர்
நச்சறு காட்சி யவர்.

## II. நல்லொழுக்கம்.

### ஒழுக்கம்.

மக்க ளுடம்பு பெறற்கரிது பெற்றபின்
மக்க ளறிவு மறிவரிது—மக்கள்
அறிவ தறிந்தா ரறத்தின் வழுவார்
நெறித்தலை நின்றொழுகு வார். (212)

['அறிவதறிந்தாரென்பா ரறத்தின் வழுவா' என்பது புறத்திரட்டிற் கண்ட பிரதிபேதம்.]

பிறந்த விடநினைப்பிற் பேர்த்துள்ள லாகா
மறந்தேயு மாண்பொழியு நெஞ்சே—சிறந்த
ஒழுக்கத்தோ டொன்றி யுயப்போதி யன்றே
புழுக்கூட்டுப் பொச்சாப் புடைத்து. (182)

### கற்றவழியில் நிற்றல்.

தேசுந் திறனறிந்த திட்பமுந் தேர்ந்துணர்ந்து
மாசு மனத்தகத் தில்லாமை—ஆசின்றிக்
கற்றல் கடனறிதல் கற்றா ரினத்தராய்
நிற்றல் வரைத்தே நெறி. (127)

எப்பிறப் பாயினு மேமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்கண்
நிற்றலுங் கூடப் பெறின். (142)

கற்றதுவுங் கற்றொருபா னிற்பக் கடைப்பிடியு
மற்றொருபால் போக மறித்திட்டுத்—தெற்றென
நெஞ்சத்துட் டூமை யெழுதருமே லின்னாதே
கஞ்சத்துட் கற்பட்டாற் போன்று. (123)

விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை நீக்கிக்
கதிப்பட்ட நூலினைக் கையிகந் தாக்கிப்
பதிப்பட்டு வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்திற் பட்ட மறு. (162)

பற்றொடு செற்றம் பயமின்றிப் பல்பொருளும்
முற்ற வுணர்ந்தான் மொழிந்தன—கற்றும்
கடையாய செய்தொழுகுங் காரறிவி னோரை
அடையா ரறிவுடை யார். (156)

நல்வினைப்பி னல்லால் நறுந்தா மரையாளும்
செல்லாள் சிறந்தார்பி னாயினு—நல்வினைதான்
ஒத்து மொழுக்கமுந் தானமு முள்வழி
நீத்த லொருபொழுது மில். (124)

தன்னிற் பிறிதில்லை தெய்வ நெறிநிற்பில்
ஒன்றானுந் தானெறி நில்லானேல்—தன்னை
இறைவனாச் செய்வானுந் தானேதான் றன்னைச்
சிறைவனாச் செய்வானுந் தான். (172)

அஞ்சினா யேனு மடைவ தடையுங்காண்
துஞ்சினா யென்று வினைவிடா—நெஞ்சே
அழுதா யெனக்கருதிக் கூற்றொழியா தாற்றத்
தொழுதேன் நிறையுடைமை யாகு. (189)

## அடக்கம்.

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். (43)

['அலர்கதிர்ஞாயிற்றைக் குடைகாக்குஞ் சிலகற்றார் கண்ணுமுளவாங் கதிரொளிபோற் பலகற்றார்க்' என்பது ஒரு பிரதியிற் கண்ட பாடபேதம்.]

## வெகுளாமை.

உழந்துழந்துங் கொண்ட வுடம்பினைக் கூற்றுண்ண
இழந்திழந் தெங்கணுந் தோன்றச்—சுழன்றுழன்ற
சுற்றத்தா ரல்லாதா ரில்லையா னன்னெஞ்சே
செற்றத்தாற் செய்வ துரை. (102)

[உழந்துழந்து கொண்ட. எங்கண்ணும்—பாடபேதம்.]

உயிரு முடம்பும் பிரிவுண்மை யுள்ளிச்
செயிருஞ் சினமுங் கடிந்து—பயிரிடைப்
புற்களைந்து நெற்பயன் கொள்ளு மொருவன்போல்
நற்பயன் கொண்டிருக்கற் பாற்று. (178)

## பொறை.

தன்னை யொருவ னிகழ்ந்துரைப்பிற் றானவனைப்
பின்னை யுரையாப் பெருமையான்—முன்னை
வினைப்பயனு மாயிற்றா மென்றதன்கண் மெய்ம்மை
நினைத்தொழிய நெஞ்சினோ யில். (96)

எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினு—மெள்ள
அறிவென்னு நீரா லவித்தொழுக லாற்றின்
பிறிதெனினும் வேண்டா தவம். (101)

நம்மைப் பிறர்சொல்லும் சொல்லிவை நாம்பிறரை
எண்ணாது சொல்லு மிழுக்கிவை யென்றெண்ணி
உரைகள் பரியா துரைப்பாரில் யாரே
களைகண தில்லா தவர். (213)

## இன்னாசெய்யாமை.

பிறர்க்கின்னா செய்தலிற் பேதைமை யில்லை
பிறர்க்கின்னா தென்றுபே ரிட்டுத்—தனக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலிற்
பித்து முளவோ பிற. (95)

### புறங்கூறாமை.

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை. (49)

பொய்ம்மேற் கிடவாத நாவும் புறனுரையைத்
தன்மேற் படாமை தவிர்ப்பானு—மெய்ம்மேல்
பிணிப்பண் பழியாமை பெற்ற பொழுதே
தணிக்கு மருந்து தலை. (152)

### மதுபானம்.

ஒளியு மொளிசான்ற செய்கையுஞ் சான்றோர்
தெளிவுடைய ரென்றுரைக்குந் தேசும்—களியென்னும்
கட்டுரையாற் கோதப் படுமேல் இவையெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து. (145)

### சூது.

ஓதலு மோதி யுணர்தலும் சான்றோரால்
மேதை யெனப்படு மேன்மையும்—சூது
பொருமென்னுஞ் சொல்வினாற் புல்லப் படுமேல்
இருளா மொருங்கே யிவை. (148)

### மானம்.

தனக்குத் தகவல்ல செய்தாங்கோ ராற்றால்
உணற்கு விரும்புங் குடரை—வனப்புற
ஆம்பற்றாள் வாடலே போல வகத்தடக்கித்
தேம்பத்தாங் கொள்வ தறிவு. (157)

### காமம்.

அறனு மறனறிந்த செய்கையுஞ் சான்றோர்
திறனுடைய னென்றுரைக்குந் தேசும்—பிறனில்
பிழைத்தா னெனப்பிறரால் பேசப் படுமேல்
இழுக்கா மொருங்கே யிவை. (149)

சாவாய்நீ நெஞ்சே சல்லிய வென்னைநீ
ஆவதன்க ணென்றூனு நிற்கொட்டாய்—ஓவாதே
கட்டழித்துக் காமக் கடற்கென்னை யீர்ப்பாயே
விட்டெழுங்கா லென்னுவாய் சொல். (187)

[சல்லியம்—கலக்கம்.]

பழியொடு பாவத்தைப் பாராய்நீ கன்றிக்
கழிபெருங் காமநோய் வாங்கி—வழிபடா
தோடுமன னேவிடுத் தென்னை விரைந்துநீ
நாடிக்கொள் மற்றோ ரிடம். (188)

மக்களு மக்களல் லாரு மெனவிரண்டு
குப்பைத்தே குண்டுநீர் வையகம்—மக்கள்
அளக்குங் கருவிமற் றொண்பொரு ளொன்றோ
துளக்கறு வெள்வளையார் தோள். (211)

[துளக்கற—பாடபேதம்.]

## நட்பு.

இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலால்—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப்படு வார். (44)

நட்டா ரெனப்படுவார் நாடுங்கால் வையத்துப்
பட்டாம் பலபிறப்புத் துன்பமென்—றொட்டி
அறநெறி கைவிடா தாசாரங் காட்டிப்
பிறநெறி போக்கிற் பவர். (45)

நட்டாரை வேண்டி னறுமென் கதுப்பினாய்
விட்டாரை யல்லாற் கொளல்வேண்டா—விட்டார்
பொறிசுணங்கு மென்முலைப் பொன்னனாய் உய்ப்பர்
மறிதா வில்லாக் கதி. (46)

காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்தெறித்துப்
பாலொடு நெய்பெய்யுந் தாயனையர்—சால
அடக்கத்தை வேண்டி யறன்வலித்து நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார். (47)

கழியும் பகலெல்லாங் காலை யெழுந்து
பழியொடு பாவம் படாமை—யொழுகினுர்
உய்க்கும் பொறியாரை நாடி யுழிதருமே
துய்க்கும் பொருளெல்லாந் தொக்கு. (154)

காய வுரைத்துக் கருமஞ் சிதையாதார்
தாயரோ டொவ்வாரோ தக்கார்க்கு—வாய்பணிந்
துள்ள முருக வுரைத்துப் பொருள்கொள்வார்
கள்ளரோ டொவ்வாரோ தாம். (48)

அறுதொழி லீத்தாரை மெச்சா தவற்றோ
டுறுநரைச் சார்ந்துய்யப் போதல்—இறுவரைமேல்
கண்ணின் முடவன் துணையாக நீள்கானம்
கண்ணிலான் சென்ற துடைத்து. (86)

குற்றத்தை நன்றென்று கொண்டு குணமின்றிச்
செற்ற முதலா வுடையவரைத்—தெற்ற
அறிந்தாரென் றேத்து மவர்களைக் கண்டால்
துறந்தெழுவர் தூய்க்காட்சி யார். (128)

## புலான் மறுத்தல்.

கொன்றா னுகருங் கொடுமையை யுண்ணினைந்
தன்றே யொழிய விடுவானேல்—என்றும்
இடுக்க ணெனவுண்டோ இல்வாழ்க்கைக் குள்ளே
படுத்தானுந் தன்னைத் தவம். (62)

['இன்றே'—பிரதிபேதம்.]

தம்புண் கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர்—அந்தோ
நடுநின் றுலக நயனிலா மாந்தர்
வடுவன்றோ செய்யும் வழக்கு. (97)

['உலகினயனிலா'—பிரதிபேதம்.]

## போது.

அறங்கூறு நாவென்ப நாவும் செவியும்
புறங்கூற்றுக் கேளாத வென்பர்—பிறன்றாரத்
தற்றத்தை நோக்காத கண்ணென்ப யார்மாட்டும்
செற்றத்தைத் தீர்ந்ததா நெஞ்சு. (202)

பெண்விழைவார்க் கில்லை பெருந்தூய்மை பேணுதூண்
உண்விழைவார்க் கில்லை யுயிரோம்பல் எப்பொழுதும்
மண்விழைவார்க் கில்லை மறமின்மை மாணுது
தம்விழைவார்க் கில்லை தவம். (115)

கல்லான் கடைசிதையும் காமுகன் கண்காணுன்
புல்லான் பொருள்பெறவே பொச்சாக்கும்—நல்லான்
இடுக்கணும் இன்பமும் எய்தியக் கண்ணும்
நடுக்கமு நன்மகிழ்வு மில். (150)

தானத்தின் மிக்க தருமமும் தக்காற்கு
ஞானத்தின் மிக்க வுசாத்துணையும்—மானம்
அழியா வொழுக்கத்தின் மிக்கதூஉ மில்லை
பழியாமல் வாழுந் திறம். (61)

தூயவாய்ச் சொல்லாடல் வண்மையும் துன்பங்கள்
ஆய பொழுதாற்று மாற்றலும்—காய்விடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையும் இம்மூன்றும்
சாற்றுங்காற் சாலத் தலை. (153) [வண்மை—லக்ஷணம்.]

வெம்மை யுடைய தடிசில் விழுப்பொருட்கண்
செம்மை யுடையதாஞ் சேவகம்—தம்மைப்
பிறர்கருதி வாழ்வதாம் வாழ்க்கை இம்மூன்றும்
உறவருவ தோர்வதா மோர்ப்பு. (204)

ஒறுப்பாரை யாதொறுப்பன் தீயார்க்குந் தீயேன்
வெறுப்பார்க்கு நான்மடங்கே யென்ப—ஒறுத்தியேல்
ஆர்வ மயக்கங் குரோதம் இவைமூன்றும்
ஊர்பகை நின்க ணொறு. (98)

குலத்துப் பிறந்தார் வனப்புடையார் கற்றார்
நினைக்குங்கால் நின்றுழியே மாய்வர்—வினைப்பயன்கொல்
கல்லார் குலமில்லார் பொல்லார் தறுகட்ப
மில்லார்பின் சென்ற நிலை. (151) [தறுகட்பம்—பெருமை.]

கடம்பன்றான் றன்னொடு காம்படுதோள் வள்ளி
உடம்பினுங் கூட்ட மதுவுந்து கேட்பர்—அடங்கிக்
கொடுத்துண்மின் கொண்டொழுக்கங் காணுமினென் பார்சொல்
அடுப்பேற்றி யாமைதீய்ந் தற்று. (54)

[இரண்டாவது அடி ஐஞ்சீரடி.]

வேட்டவாய்க் கேட்பர் விரைந்தோடி ஞாலத்தார்
கேட்டைக் கிழத்தியைப் பாடுங்கால்—கோட்டில்லா
ஓதுமி னோதி யடங்குமி னென்னுஞ்சொல்
கூதற்குக் கூத ரனைத்து. (53) [கூதல்—குளிர்.]

# III. நன்ஞானம்.

## நிலையாமை.

இறையிறை யின்சந்தித் தென்பொறேன் சார்த்தி
முறையி னரம்பெங்கும் யாத்து—நிறைய
அவாப்பெய்த பண்டியை யூர்கின்ற பாகன்
புகாச்சுருக்கிற் பூட்டா விடும். (168)

[நரம்பெங்குமார்த்து—பாடபேதம்.]

ஆசையும் பாசமு மன்பு மகத்தடக்கிப்
பூசிப் பொதிந்த புலாலுடம்பு—ஊசல்
கயிறற்ருற் போலக் கிடக்குமே கூற்றத்
தெயிறுற் றிடைமுரிந்தக் கால். (104)

மறந்தொருவன் வாழுமிம் மாயமா வாழ்க்கை
அறிந்தொருவன் வாழுமே யில்லைச்—செறிந்தொருவன்
ஊக்க மிறந்துறுதி கொள்ளாக்கா லோகொடிதே
கூற்ற மிடைகொடுத்த நாள். (68)

தோற்றமுஞ் சம்பிரதம் துப்புரவுஞ் சம்பிரதம்
கூற்றமுங் கொள்ளுங்காற் சம்பிரதம்—தோற்றங்
கடைப்பட்ட வாறறிந்து கற்றறிந்தார் துஞ்சார்
படைப்பட்ட நாயகனே போன்று. (174)

[சம்பிரதம்—சித்து, மாயவித்தை.]

தெரிவி லிளமையுந் தீப்பிணியு மூப்பும்
பிரிவுந் துயிலு மொரீஇப்—பருவந்து
பத்தெட்டு நாளைப் பயனிலா வாழ்க்கைக்கு
வித்துக்குற் றுண்பார் பலர். (113)

பிறப்பிறப்பு மூப்புப் பிணியென்றிந் நான்கு
மறப்பர் மதியிலா மாந்தர்—குறைக்கூடாச்
செல்வங் கிளைபொருள் காமமென் றிந்நான்கும்
பொல்லாப் பொறியறுக்கப் பட்டு. (132)

மூப்புப் பிணியே தலைப்பிரிவு நல்குரவு
சாக்காடு மெல்லாஞ் சலமிலவாய்—நோக்கீர்
பருந்துக் கிரையாமிவ் யாக்கையைப் பெற்றால்
மருந்து மறப்பதோ மாண்பு. (133)

நீக்கரு நோய்மூப்புத் தலைப்பிரிவு நல்குரவு
சாக்காடென் றைந்து களிறுழக்கப்—போக்கரிய
துன்பத்துட் டுன்ப முழப்பர் துறந்தெய்தும்
இன்பத் தியல்பறியா தார். (134)

எக்காலுஞ் சாத லொருதலையே யானுனக்குப்
புக்கி லிறையத் தருகிலேன்—மிக்க
அறிவனை வாழ்த்தி அடவி துணையாத்
துறத்தன்மேற் சார்த றலை. (120)
[‘சாதறலை’—பாடபேதம்.]

அங்க மறவாடி யங்கே படமறைந்
தங்கே யொருவண்ணங் கோடலா—லென்றும்
அரங்காடு கூத்தனே போலு முயிர்தான்
சுழன்றாடு தோற்றப் பிறப்பு. (118)

இக்காலத் திவ்வுடம்பு செல்லும் வகையினாற்
பொச்சாவாப் போற்றித்தா நோற்பாரை—மெச்சா
தலந்துதம் வாய்வநது கூறு மவரின்
விலங்குக ணல்ல மிக. (165)

எண்ணற் கரிய விடையூ றுடையதனைக்
கண்ணினாற் கண்டு கருதாதே—புண்ணின்மேல்
வீக்கருவி பாய விருந்தற்றால் மற்றதன்கட்
டீக்கருமஞ் சோர விடல். (117)

ஒருபாக னூருங் களிறைந்து நின்ற
இருகா னெடுங்குரம்பை வீழின்—தருகாலாற்
பேர்த்தூன்ற லாகாப் பெருந்துன்பங் கண்டாலும்
ஓர்த்தூன்றி நில்லா துலகு. (206)

நெடுந்தூ ணிருகாலா நீண்முதுகு தண்டாக்
கொடுங்கால் விலாவென்பு கோலி—யுடங்கியநற்
புன்றோலால் வேய்ந்த புலால்வாய்க் குரம்பையை
இன்புறுவ ரேழை யவர். (208)

என்புகா லாக விருதோளும் வேயுளா
ஒன்பது வாயிலு மூற்றறுத்—துன்பக்
குரம்பை யுடையார் குடிபோக்கு நோக்கிக்
கவர்ந்துண்ணப் போந்த கழுகு. (209)

நீத்தொழிந்த வாறைந் தடக்கியபின் னிச்சயமே
வாய்த்தமைந்த வாயில்பெண் ணுளையுங்—கூத்தற்கு
வாளேறோ டோசை விளைநில மிவ்வல்லாற்
கேளா யுடன்வருவ தில். (219)

['வாய்த்தமைந்த வாயப் பெண்ணுனை' என்று ஒரு பிரதியில் பாடம்.]

வாழ்நாளிற் பாகந் துயினீக்கி மற்றவற்றுள்
வீழ்நா ளிடர்மூப்பு மெய்கொள்ளும்—வாழ்நாளுட்
பன்னோய் கவற்றப் பரிந்து குறையென்னை
அன்னோ வளித்திவ் வுலகு. (135)

உடம்புங் கிளையும் பொருளும் பிறவுந்
தொடர்ந்துபின் செல்லாமை கண்டு—மடங்கித்
தவத்தொடு தானம் புரியாது வாழ்வா
ரவத்தங் கழிகின்ற நாள். (144)

போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாந் தொண்டேபோ—லாற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு. (163)

புகாவுண்பா ரல்லுண்ணர் போகுந் துணைக்கட்
டவாவினை வந்தடையக் கண்டு—மவாவினைப்
பற்றுசெய் தென்னை பயமின்றா னன்னெஞ்சே
ஒற்றி யுடம்போம்பு தற்கு. (119)

நன்ஞான நற்காட்சி நல்லொழுக்க மென்றிவை
தன்னுன் முடித்தரு ணில்லையேற்—பொன்னே
பொலாவட்டஞ் செய்த வணிகலந் தேயகிற்போ
லுலாய்வட்ட நில்லா துடம்பு. (131)

[நான்காமடி அலகிட இயையவில்லை.]

## தூய் தன் மை.

புழுப்போ லுவர்ப்பூறிப் பொல்லாங்கு நாறும்
அழுக்குடம்பு தன்னுள் வளர்ந்தாய்—விழுத்துமிழ்ந்
தின்ன நடையா யிறக்கும் வகையினை
நன்னெஞ்சே நாடாய்கா ணற்கு. (190)

ஒழுக்க மிலஞுகி யோர்த்துடைய னென்னும்
புழுப்பொதிந்த புண்ணிற் கொடிதாங்—கழுக்கிரையை
ஓம்பிமற் றென்னை யுறுதிக்க ணில்லாக்கா
றேம்பி விடுதலே நன்று. (136)

முடையுடை யங்கணம் நாடோறு முண்ட
கடை முறைவாய் போதரக் கண்டுந்—தடுமாற்றில்
சாவாப் பிறவாவிச் சம்பிரத வாழ்க்கைக்கு
மேவாதா மெய்கண்டார் நெஞ்சு. (183)

வயிறு நிறைக்குமேல வாவின்மிக் கூறிச்
செயிரிடைப்பா டெய்துமாஞ் சீவன்—வயிறுமோர்
பெற்றியா லார்த்திப் பெரும்பயன் கொள்வதே
கற்றறிந்த மாந்தர் கடன். (210)

## புலனடக்கல்.

புலன்கள் பொருட்டாகப் பொச்சாந்து நெஞ்சே
சலங்களைச் சார வொழுகல்—புலன்கள்
ஒறுக்கும் பருவத் துசாத்துணையு மாகா
வெறுத்துநீ யுண்டல் கடன். (181)

புகாப்பெருக வூட்டிற் புலன்கண் மிக்கூறி
அவாப்பெருகி யற்றந் தருமால்—புகாவுமோர்
பெற்றியா னூட்டிப் பெரும்பயன் கொள்வதே
கற்றறிந்த மாந்தர் கடன். (122)

ஒறுக்கிலே னூர்பசை யென்கட் பிறரை
ஒறுக்கிற்பெ னென்றுரைப்பை யாகில்—கறுத்தெறிந்து
கற்கறித்துக் கற்கொண் டெறிந்தாரைக் காய்கல்லா
பற்கழனு யன்ன துடைத்து. (99)

['கறுத்தெறிந்த கற்குறித்து......காக்கல்லா'—பாடபேதம்.]

உள்ளப் பெருங்குதிரை யூர்ந்து வயப்படுத்திக்
கள்ளப் புலனைந்துங் காப்பமைத்து—வெள்ளப்
பிறவிக்க ணீத்தார் பெருங்குணத் தாரைத்
துறவித் துணைபெற்றக் கால். (203)

பரிந்தெனக்கோர் நன்மை பயப்பாய்போ னெஞ்சே
அரிந்தென்னை யாற்றவுந் தின்னல்—புரிந்துநீ
வேண்டுவ வேண்டுவே னல்லேன் விழுக்குணம்
பூண்டேன் பொறியிலி போ. (186)

தன்னைத்தன் னெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தா னெய்தா நலனில்லை—தன்னைக்
குடிகெடுக்குந் தீநெஞ்சிற் குற்றேவல் செய்தல்
பிடிபடுக்கப் பட்ட களிறு. (207)

உள்ளு ளிருந்துந்தம் முள்ளமறப் பெற்றாரேல்
கள்ளவிழ் சோலையாங் காட்டுளார் காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரேல் நாட்டுள்ளும்
நண்ணி நடுவூ ருளார். (215)

நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பேனேல் பெற்றேன்மற் றீண்டே
துறக்கந் திறப்பதோர் தாள். (191)

ஆதன் பெருங்களி யாள னவனுக்குத்
தோழன்மா ரைவரும் வீண்கிளைஞர்—தோழர்
வெறுப்பளவு முண்டெழுந்து போனக்கா லாதன்
இறுக்குமா முண்ட கடன். (129) [ஆதன்—அறிவிலான்.]

தன்னைக்குந் தெய்வம் பிறிதில்லை தான்றன்னைப்
பின்னை மனமறப் பெற்றானேல்—என்னை
எழுத்தெண்ணே நோக்கி யிருமையுங் கண்டாங்
கருட்கண்ணே நிற்ப தறிவு. (171)

தடுமாற்ற மஞ்சிய தம்மை யுடையார்
விடுமாற்றந் தேர்ந்தஞ்சித் துஞ்சார்—தடுமாற்றம்
யாது மறியாருந் துஞ்சார்த மைம்புலனு
மாரும்வகை யாதாங்கொ லென்று. (175)

ஆர்வில் பொறியைந்திற் காதி யிருவினையால்
தீர்விலநீ கோதாதி சேர்விக்குந்—தீர்வில்
பழியின்மை யெய்திற் பறையாத பாவம்
வழியும் வருதலு முண்டு. (193)

அலைபுனலு ணிற்பினுந் தாமரை யீன்ற
இலையின்க ணீர்திவளா தாகு—மலைவில்
புலன்களி னிற்பினும் பொச்சாப் பிலரே
மலங்கடி வாளா தவர்க்கு. (214)

## ஊழ்.

பெற்றி கருமம் பிழையாமற் செய்குறின்
பற்றின்க ணில்லா தறஞ்செய்க—மற்றது
பொன்றாப் புகழ்நிறுத்திப் போய்ப்பிறந்த வூர்நாடிக்
கன்றுடைத் தாய்போல் வரும். (60)

பேறழிவு சாவு பிறப்பின்பந் துன்பமென்
றாறுள வந்நா ளமைந்தன—தேறி
அவையவை வந்தா லழுங்காது விம்மா
திவையிவை யென்றுணரற் பாற்று. (170)
[பாடபேதம்—பேறிழவு.]

தானே தனக்குப் பகைவனு நட்டானும்
தானே தனக்கு மறுமையு மிம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் றுய்த்தலால்
தானே தனக்குக் கரி. (173)

செய்வினை யல்லாற் சிறந்தார் பிறிதில்லை
பொய்வினை மற்றைப் பொருளெல்லா—மெய்வினவில்
தாயார் மனைவியார் தந்தையார் மக்களார்
நீயார் நினைவாழி நெஞ்சு. (180)

உயிர்திகிரி யாக வுடம்புமண் ணுகச்
செயிர்கொள் வினைகுயவ ளுகச்—செயிர்தீரா
எண்ணருநல் யாக்கைக் கலம்வனையு மற்றதனுள்
எண்ணருநோய் துன்ப மவர்க்கு. (216)

முற்பிறப்பிற் றுஞ்செய்த புண்ணியத்தி னல்லதோர்
இற்புறத் தின்புரு நின்றவ—ரிப்பிறப்பே
இன்னுங் கருதுமே லேதங் கடிந்தறத்தை
முன்னி முயன்றெழுகற் பாற்று. (58)
['இற்பிறந்தின்புரு நின்றவ ரிற்பிறப்பே'—பாடபேதம்.]

அம்மைத் தாஞ்செய்த அறத்தின் வருபயனை
இம்மைத்துய்த் தின்புரு நின்றவர்—உம்மைக்
கறஞ்செய்யா தைம்புலனு மாற்றுதல் நல்லாக்
கறந்துண்டஃ தோம்பாமை யாம். (57)

இறந்த பிறப்பிற்றுஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக—பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக வினிப்பிறந்
தெய்தும் வினையின் பயன். (59)

தாய்தந்தை மக்க ளுடன்பிறந்தார் சுற்றத்தா
ராய்வந்து தோன்றி யருவினையால்—மாய்வதன்கண்
மேலைப் பிறப்பு மிதுவானுன் மற்றென்னை?
கூலிக் கழுத குறை. (143)

## IV. மனைவாழ்க்கை.

### நற்பெண்டிர்.

வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றால்
மனைவாழ்க்கை நன்று தவத்திற்—புனைகோதை
மெல்லிய னல்லாளு நல்லள் விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லா ளெனில். (89)

கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை—விண்டு
வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
உறுப்போ டுணர்வுடையாள் பெண். (90)

மடப்பதூஉ மக்கட் பெறுவதூஉம் பெண்பான்
முடிப்பதூஉ மெல்லாருஞ் செய்வர்—படைத்ததனால்
இட்டுண்டில் வாழ்க்கை புரிந்துதா நல்லறத்தே
நிற்பாரே பெண்டிரென் பார். (91)

வழிபா டுடையளாய் வாழ்க்கை நடாஅய்
முனியாது சொல்லிற்றுச் செய்தாங்—கெதிருரையா
தேத்திப் பணியுமே யில்லாளை யாண்மகன்
போற்றிப் புனையும் பரிந்து. (92) ['புரிந்து'–பாடபேதம்.]

### தீப்பெண்டிர்.

தலைமகனிற் றீர்ந்துறைத லூன்பிறரிற் சேர்தல்
நிலைமையி றீப்பெண்டிர்ச் சேர்தல்—கலனணிந்து
வேற்றூர்ப் புகுதல் விழாக்காண்ட னோன்பிடுதல்
கோற்றொடியாள் கோளழியு மாறு. (94)

அயலூ ரவன்போக வம்மஞ்ச ளாடிக்
கயலேர்கண் ணார வெழுதிப்—புயலைம்பால்
வண்டோச்சி நின்றுலாம் வாளேர் தடங்கண்ணாள்
தண்டோச்சிப் பின்செல்லுங் கூற்று. (93)

## இல்வாழ்க்கை.

மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டியப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடை வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று. (88)

பிச்சையு மையமு மிட்டுப் பிறன்றார
நிச்சலு நோக்காது பொய்யொரீஇ—நிச்சலுங்
கொல்லாமை காத்துக் கொடுத்துண்டு வாழ்வதே
இல்வாழ்க்கை யென்னு மியல்பு. (71)

விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணன்—பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை யென்ப திருள். (72)

அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளைஞ்ஞான்றும்
அட்டுண்ணு மாட்சி யுடையவர்—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வா ரதிதிக ளென்றுரைத்தல்
வீழ்வார்க்கு வீழ்வார் துணை. (85)

## ஈகை.

நொறுங்குபெய் தாக்கிய கூழார வுண்டு
பிறங்கிரு கோட்டொடு பன்றியும் வாழும்
அறஞ்செய்து வாழ்வதே வாழ்க்கைமற் றெல்லாம்
வெறும்பேழை தாழ்க்கொளீஇ யற்று. (78)

உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுணக் காலத்துக் கூராதாம் தொக்க
உடம்பும் பொருளு முடையானோர் நன்மை
தொடங்காக்கா லென்ன பயன். (74)

பெற்றநாள் பெற்றநாள் பெற்றதனு ளாற்றுவதொன்
றிற்றைநா ளீத்துண் டினிதொழுகல்—சுற்று
மிதனி விலேசுடை காணோ மதனை
முதனின் றிடைதெரியுங் கால். (75)

['இற்றைநாட் கீத்துண்டி நீத்தொழுகல்—சுற்றம்'—பாடபேதம்.]

கொடுத்துக் கொணர்ந்தறஞ் செல்வங் கொடாது
விடுத்துத்தம் வீறழிதல் கண்டார்—கொடுப்பதன்கண்
ஆற்ற முடியா தெனினுந்தா மாற்றுவார்
மாற்றார் மறுமைகாண் பார். (73)

பட்டார்ப் படுத்துப் படாதார்க்கு வாட்செறித்து
விட்டொழிவ தல்லாலவ் வெங்கூற்ற—மொட்டிக்
கலாய்க்கொடுமை செய்யாது கண்டதுபாத் துண்டல்
புலாற்குடிலா லாய பயன். (103)

தண்டாமம் பொய்வெகுளி பொச்சாப் பழுக்காறென்
றைந்தே கெடுவார்க் கியல்பென்ப—பண்பாளா
ஈத லறித லியற்றுத லின்சொற்கற்
றாய்த லறிவார் தொழில். (164)

[தண்டாமம்—மானம். பொச்சாப்பு—மாயை. இயற்றுதல்—தருமந் தேடுதல்.]

நீத்தாற்றி நின்ற நிலையினு ருண்டக்கால்
ஈத்தாற்றி னாரு முயப்போவர்—நீத்தாற்றிற்
பெற்றி புனையன்னார் பேர்த்துண்ணா விட்டக்கா
லெற்றா னுயப்போ முலகு. (82)

கொடுத்துய்யப் போமாறு கொள்வான் குணத்தில்
வடுத்தீர்ந்தா ருண்ணிற் பெறலாம்—கொடுத்தாரைக்
கொண்டுய்யப் போவார் குணமுடையா ரல்லாதார்
உண்டுடத்து வீழ்வார் கிழக்கு. (81)

அடங்கி யடங்கினார்க் கீத றலையே யடங்கா
தடங்கினார்க் கீத் லிடையே—நுடங்கிடையாய்
ஏற்பானுந் தானு மடங்காக்கா லஃதென்ப
தோற்பாவைக் கூத்தினுட் போர். (83)

[முதலடி ஐஞ்சீரடி.]

வாழ்நா ளுடம்பு வலிவனப்புச் செல்கதியுந்
தூமா ணினைவொழுக்கங் காட்சியுந்—தாமாண்ட
உண்டி கொடுத்தான் கொடுத்தலா லூண்கொடையோ
டொன்றுங் கொடையொப்ப தில். (87)

பரப்புநீர் வையகத்துப் பல்லுயிர்கட் கெல்லாம்
இரப்பாரில் வள்ளல்களு மில்லை—இரப்பவர்
இம்மைப் புகழு மினிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்த லால். (220)

[முதல்வரியில் 'பல்லவருளெல்லாரும்' என்ற பாடம் அலகிட இயைய வில்லை.]

செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்ல
தான மறவாத தன்மையரே லஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு. (76)

ஒன்றாக நல்ல துயிரோம்ப லாங்கதன்பின்
நன்றாய்ந் தடங்கினார்க் கீத்துண்டல்—என்றிரண்டுங்
குன்றாப் புகழோன் வருகென்று மேலுலகம்
நின்றது வாயிற் றிறந்து. (63)

சோரப் பசிக்குமேற் சோற்றூர்திப் பாகன்மற்
றீரப் படினு மதுவூரான்—ஆரக்
கொடுத்துக் குறைகொள்ளல் வேண்டு மதனுன்
முடிக்குங் கருமம் பல. (121)

ஈவாரு ளில்லை யுலோப ருலகத்தில்
யாவருங் கொள்ளாத வாறெண்ணி—மேவரிய
மற்றுடம்பு கொள்ளும் பொழுதோர்ந்து தம்முடைமை
பற்று விடுதே லிலர். (221)

['பற்றுவிடத் தில்லா தவர்'–பாடபேதம்.]

இட்டக் கடைத்தரா ரீண்டும் பலிமரீஇப்
பட்ட வழங்காத பான்மையார்—நட்ட
சரிகையாற் காணுஞ் சுலாக்கோலாற் காணுஞ்
சொரிவதா மாபோற் சுரந்து. (77)

கொடுப்பான் பசைசார்ந்து கொள்வான் குணத்திற்
கொடுக்கப் படுத லமையின்—அடுத்தடுத்துச்
சென்றுங் கடைந்து கலைவினை யென்பரே
வென்றார் விளங்க விரித்து. (80)

கொடுப்பான் வினையல்லன் கொள்வானு மல்லன்
கொடுக்கப் படும்பொருளு மென்றால்—அடுத்தடுத்து
நல்லவை யாதாங்கொல் நாடி யுரையாய்நீ
நல்லவர் நாப்பண் நயந்து. (79)

['மன்றால்'–பாடபேதம்.]

## V. வீட்டுலகமெய்தல்.

அறிவு மிகப்பெருக்கி ஆங்கார நீக்கிப்
பொறியைந்தும் வெல்லும்வாய் போற்றிச்—செறிவிஞன்
மன்னுயி ரோம்புந் தகைத்தேகா ணன்ஞானந்
தன்னை யுயக்கொள் வது. (205)

சோறியாரு முண்ணுரோ சொல்லியாருஞ் சொல்லாரோ
வேறியாரும் வையத்து ளேருரோ—தேறி
உரியதோர் ஞானங்கற் றுள்ளந் திருத்தி
அரிய துணிவதா மாண்பு. (125)

பாம்புண்ட நீரெல்லா நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீ ரமுதமாம்—ஓம்பற்
கொளியா முயர்ந்தார்கள் ஞான மதுபோற்
களியாங் கடையாயார் மாட்டு. (52)

கெடுக்கப் படுவது தீக்கரும நாளும்
கொடுக்கப் படுவ தருளே—அடுத்தடுத்
துண்ணப் படுவது நன்ஞான மெப்பொழுதும்
எண்ணப் படுவது வீடு. (64)

இந்தியக் குஞ்சரத்தை ஞானப் பெருங்கயிற்றல்
சிந்தனைத் தூண்பூட்டிச் சேர்த்தியே—பந்திப்பர்
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்து வார். (192)

உணர்ச்சியச் சாக உசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
ஊர்கின்ற பாக னுணர்வுடைய னாகுமேல்
பேர்கின்ற தாகும் பிறப்பு. (169)

தறுகட் டறுகட்பந் தன்னைத்தா னேவல்
உறுதிக் குறுதி யுயிரோம்பி வாழ்தல்
அறிவிற் கறிவாவ தெண்ணின் மறுபிறப்பு
மற்றீண்டு வாரா நெறி. (126)

[தறுகட்டறுகட்பம்—பெருமைக்கெல்லாம் பெருமை.]

உயிர்வித்தி யூன்விளைத்துக் கூற்றுண்ணும் வாழ்க்கைச்
செயிர்வித்திச் சீலந்தின் றென்னை?—செயிரினை
மாற்றி மறுமை புரிகிற்பிற் காணலாங்
கூற்றங் குறுகா விடம். (110)

இருளே யுலகத் தியற்கை இருளகற்றுங்
கைவிளக்கே கற்ற வறிவுடைமை—கைவிளக்கி
னெய்யேதன் னெஞ்சத் தருளுடைமை நெய்பயந்த
பால்போ லொழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலக மெய்து பவர். (146)

ஆர்வமுஞ் செற்றமு நீக்கி யடங்குதல்
சீர்பெறு வீட்டு நெறியென்ப—நீர்புகப்
பட்டிமை புக்கா னடங்கின னென்பது
கெட்டார் வழியியக்கு மாறு. (166)

அருளால் அறம்வளரும் ஆள்வினையா னாக்கம்
பொருளாற் பொருள்வளரும் நாளும்—தெருளா
விழைவின்பத் தால்வளருங் காமம் அக்காமம்
விழைவின்மை யால்வளரும் வீடு. (141)

பண்ணமை யாழ்குழல் கீதமென் றின்னவை
நண்ணி நயப்ப செவியல்ல—திண்ணிதின்
வெட்டெனச் சொன்னீக்கி விண்ணின்பம் வீட்டொடு
கட்டுரை கேட்ப செவி. (195)

புண்ணுகப் போழ்ந்து புலால்பழிப்பத் தாம்வளர்ந்த
வண்ணப்பூண் பெய்வ செவியல்ல—நுண்ணூல்
அறவுரை கேட்டுணர்ந் தஞ்ஞான நீக்கி
மறவுரை விட்ட செவி. (194)

கண்டவர் காமுறூஉங் காமருசீர் காதிற்
குண்டலம் பெய்வ செவியல்ல—கொண்டுலகில்
மூன்று முணர்ந்தவற்றின் முன்னது மூட்டின்றிச்
சூன்று சுவைப்ப செவி. (196)

பொருளெனப் போழ்ந்தகன்று பொன்மணி போன்றெங்கும்
இருளறக் காண்பன கண்ணல்ல—மருளறப்
பொய்க்காட்சி நீக்கிப் பொருவறு முக்குடையான்
நற்காட்சி காண்பன கண். (197)

சாந்தும் புகையுந் துருக்கமுங் குங்குமமு
மோந்தின் புறுவன மூக்கல்ல—வேந்தின்
அலங்குசிங் காதனத் தண்ண லடிக்கீழ்
இலங்கிதழ் மோப்பதா மூக்கு. (198)

கைப்பன கார்ப்புத் துவர்ப்புப் புளிமதுரம்
உப்பிரதங் கொள்வன நாவல்ல—தப்பாமல்
வென்றவன் சேவடியை வேட்டுவந் தெப்பொழுது
நின்று துதிப்பதா நா. (199)

கொல்வதூஉங் கள்வதூஉ மின்றிப் பிறர்மனையிற்
செல்வதூஉஞ் செய்வன காலல்ல—தொல்லைப்
பிறவி தணிக்கும் பெருந்தவர் பாற்சென்
றறவுரை கேட்பிப்ப கால். (200)

குற்றங் குறைத்துக் குறைவின்றி மூவுலகில்
நற்ற மறைத்தாங் கருள்பரப்பி—முற்ற
உணர்ந்தானைப் பாடாத நாவல்ல வல்ல
சிறந்தான்றாள் சேராத் தலை. (201)

உடன்பிறந்த மூவ ரொருவனைச் சேவித்
திடங்கொண்டு சின்னு ளிருப்பர்—இடங்கொண்ட
இல்லத் திருவ ரொழிய வொருவனே
செல்லு மவன்பின் சிறந்து. (130)

கட்டெனச் சொல்லியக்காற் கற்பிளப்பிற் றீயேபோல்
பொட்டப் பொடிக்குங் குரோதத்தை—வெட்டெனக்
காய்த்துவரக் கண்டக்காற் காக்குந் திறலாரே
மோக்க முடிவெய்து வார். (100)

நல்வினை நாற்கால் விலங்கு நவைசெய்யுங்
கொல்வினை யஞ்சிக் குயக்கலம்—நல்ல
உறுதியு மல்லவும் நாட்பேர் மரப்பேர்
இறுதியி லின்ப நெறி. (137)

பறவை யரும்பொரு ளின்சொன் முதிரை
உறுதிக்கண் ணானுண் விலங்கு—சிறியன
நீர்ப்புட் குயக்கலம் புல்லவை யூர்வது
பேர்த்தீண்டு வாரா நெறி. (138)

உட்கப் படுமெழுத் தோரிரண் டாவதே
நட்கப் படுமெழுத்து மத்துணையே—யொட்டி
இழுக்கா வெழுத்தொன் றிமிழ்கடற் றண்சேர்ப்ப
விழுச்சார்வு வேண்டு பவர்க்கு. (139)

முப்பெயர் மூன்று முடன்கூட்டி யோரிடத்துத்
தப்பிய பின்றைத்தம் பேரொழித்—தப்பால்
பெறுபெய[illegible] [illegible] [illegible]பவே[illegible]வையத்
துறும[illegible]யெல்லா மொருங்கு. (140)

## பொது.

ஆற்றாமை யூர வறிவின்றி யாதொன்றும்
தேற்றா னெனப்பட்டு வாழ்தலின்—மாற்றி
மனையி னகன்றுபோய் மாபெருங் காட்டில்
நினையி லுடம்பிடுத லன்று. (155)

நல்லற மெந்தை நிறையெய்மை நன்குணருங்
கல்வியென் றோழன் றுணிவெம்பி—யல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ பொருளாய
இச்சுற்றத் தாரி லெனக்கு. (160)

மக்களே பெண்டிர் மருமக்க டாய்தந்தை
ஒக்க வுடன்பிறந்தா ரென்றிவர்கள்—மிக்க
கடும்பகை யாக வுழலு முயிர்தா
னெடுந்தடு மாற்றத்து ணின்று. (161)

அளற்றகத்துத் தாமரையா யம்மல ரீன்றாங்
களற்றுடம் பாமெனினு நன்றா—மளற்றுடம்பி
னன்ஞான நற்காட்சி நல்லொழுக்க மென்றிவை
தன்னாற் றலைப்படுத லான். (177)

தோற்றமில் லாத வொருவனைப் பின்னின்றாங்
காற்ற நலிவ ரிருநால்வர்—ஆற்றவும்
நல்லார்போ லவர் பகைவளர்ப்பர் மூவராற்
செல்லு மவன்பின் சிறந்து. (179)

அருவினையு மாற்றும் வருபயனு மாக்கும்
இருவினையு நின்று விளையும்—திரிவின்றிக்
கண்டுணர்ந்தார்க் கல்லது காட்டதரு நாட்டதருங்
கொண்டுரைப்பா நிற்றல் குதர். (217)

[குதர்தல்-சிதறுதல். குதர்செய்தல்-கிழித்தல்-பிரித்தல். குதர்-பிரிவு. குதர்செல்ல—வழிதப்பிச்செல்ல. "குதர் சென்று கொள்ளாத கூர்மையினிதே" என்பது இனியவை நாற்பது.]

நாலிறகிற் கண்ணிலதே யெனினு நன்பொருளின்
பேரிறையா னூண்பெயரிற் பிற்சிறக்கு மோரிரண்
டிறகிற்கண் ணுளதே யெனிலு மதனை
வெருண்டு விலங்காமற் கா. (218)

## இந் நூற் பயன்.

ஆதியின் றொல்சீர் அறநெறிச் சாரத்தை
ஓதியுங் கேட்டு முணர்ந்தவர்க்குச்—சோதி
பெருகிய வுள்ளத்த ராய்வினைக டீர்ந்து
கருதியவை கூட லெளிது. (222)

எந்நூற்க ளோதினுங் கேட்பினு மென்செய்யும்
பொய்ந்நூ லவற்றின் பொருடெரிந்து—மெய்ந்நூல்
அறநெறிச் சாரம் அறிந்தார்வீ டெய்துந்
திறநெறிச் சாரந் தெளிந்து. (223)

அவன்கொ லிவன்கொலென் றையப் படாதே
சிவன்கண்ணே செய்ம்மின்கள் சிந்தை—சிவன்றானும்
நின்றுகால் சீக்கு நிழறிகழும் பிண்டிக்கீழ்
வென்றிச்சீர் முக்குடையான் வேந்து. (225)

முனைப்பாடி யானைச்சூர் முக்குடைச் செல்வன்
றனைப்பாடி வந்தோற்குத் தந்த பரிசில்
வினைப்பாடு கட்டழித்து வீட்டின்ப நல்கி
நினைப்பாடி வந்தோர்க்கு நீமீ கென்றான்
நிறைவிளக் குப்போ விருந்து.

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS—1912